பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

08 10 2024 7 15
செவ்வாய்கிழமை இரவு

தலைப்புச் செய்திகள் -

1. ஹரியானாவில் பிஜேபி-க்கு கிடைத்த வெற்றி வளர்ச்சி மற்றும் நல்லாட்சிக்கு கிடைத்த வெற்றி என பிரதமர் திரு நரேந்திரமோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.
2. ஜம்மு-கஷ்மீரின் முதலமைச்சர் வேட்பாளராக திரு ஒமர் அப்துல்லாவை, தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவர் திரு ஃபருக் அப்துல்லா அறிவித்துள்ளார்.
3. திரைப்படத்துறையின் உயரிய விருதான தாதா சாஹேப் பால்கே விருதை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு பிரபல திரைப்பட நடிகர் மிதுன் சக்ரவர்த்திக்கு இன்று வழங்கினார்.
4. நடப்பு ஆண்டு இயற்பியல் துறைக்கான நோபல் பரிசு அமெரிக்கா விஞ்ஞானி திரு John H. Hopfield மற்றும் கனடாவின் திரு Geoffrey E. Hinton -க்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது.
5. உலக கோப்பை மகளிர் வெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் நியுசிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் டாஸ் வென்ற ஆஸ்திரேலியா முதலில் பேட்டிங்கை தேர்வு செய்தது.

[]<<<>>>[]

சட்டப்பேரவைத் தேர்தலில் ஹரியானாவில் பிஜேபி-யும், ஜம்மு-கஷ்மீரில் காங்கிரஸ் தேசிய மாநாட்டுக் கட்சிக் கூட்டணியும் ஆட்சி அமைக்கும் நிலையில் உள்ளன.

ஹரியானாவில் மொத்தம் உள்ள 90 தொகுதிகளில் பிஜேபி 41 இடங்களில் வெற்றிபெற்று ஏழு தொகுதிகளில் முன்னிலையில் உள்ளன.

காங்கிரஸ் கூட்டணி 33 இடங்களில் வெற்றிபெற்று நான்கு இடங்களில் முன்னிலை வகிக்கிறது.

இந்திய தேசிய லோக்தள் கட்சி இரண்டு இடங்களிலும், சுயேச்சைகள் மூன்று இடங்களிலும் வெற்றிபெற்றுள்ளன.

ஜம்மு-கஷ்மீரில் மொத்தம் உள்ள 90 தொகுதிகளுக்கும் தேர்தல் முடிவுகள் வெளியாகி உள்ளன.

இதன்படி தேசிய மாநாட்டுக் கட்சி 42 இடங்களிலும், காங்கிரஸ் கட்சி ஆறு இடங்களிலும் வெற்றிபெற்றுள்ளன.

பிஜேபி 29 இடங்களில் வெற்றிபெற்றுள்ளது.

மக்கள் ஜனநாயகக் கட்சி மூன்று இடங்களில் வெற்றிபெற்றுள்ளது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்,. ஆம் ஆத்மி, ஜம்மு-கஷ்மீர் மக்கள் மாநாட்டுக் கட்சி ஆகிய தலா ஒரு இடத்திலும் வெற்றிபெற்றுள்ளன.

இதர கட்சிகள் ஒன்பது இடங்களிலும் வெற்றிபெற்றுள்ளன.

[]<<<>>>[]

ஹரியானாவில் பிஜேபி மூன்றாவது முறையாக தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்க வாக்களித்த மாநில மக்களுக்கு நன்றி தெரிவிப்பதாக பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

பிரதமர் விடுத்துள்ள செய்தியில், ஹரியானா-வின் வளர்ச்சி மற்றும் நல்லாட்சிக்கு கிடைத்த வெற்றி என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜம்மு-கஷ்மீரில் பிஜேபி மீது நம்பிக்கை வைத்து வாக்களித்த மக்களுக்கும் திரு நரேந்திரமோடி நன்றி தெரிவித்துள்ளார்.

ஜம்மு-கஷ்மீரில் அரசியல் சாசனப் பிரிவு 370 மற்றும் 35-ஏ நீக்கப்பட்ட பிறகு முன் எப்போதும் இல்லாத வகையில் மக்கள் அதிக அளவில் வாக்களித்திருப்பது ஜனநாயகத்தின் மீது அவர்கள் வைத்துள்ள நம்பிக்கையை காட்டுவதாக பிரதமர் கூறியுள்ளார்.

[]<<<>>>[]

ஹரியானாவில் கிடைத்துள்ள வெற்றி பிரதமர் திரு நரேந்திரமோடி மீதும், பிஜேபி மீதும் அம்மாநில மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை வெளிப்படுத்துவதாக திரிபுரா முன்னாள் முதலமைச்சரும், ஹரியான மாநில பிஜேபி பொறுப்பாளருமான திரு **Biplab** குமார் தேவ் தெரிவித்துள்ளார்.

அகர்தலாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஹரியானா மாநிலத்தில் கட்சியின் வளர்ச்சிக்காக பிரதமர் அயராது பாடுபட்டார் என்றும் அவர் கூறினார்.

இந்த தேர்தல் முடிவுகள் வாக்குப்பதிவுக்கு பின் வெளியான கருத்துக் கணிப்புகளுக்கு எதிராக அமைந்துள்ளது என்றும் திரு **Biplab** குமார் தேவ் தெரிவித்தார்.

[]<<<>>>[]

ஹரியானா தேர்தல் முடிவுகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்று காங்கிரஸ் மூத்த தலைவர் திரு ஜெயராம் ரமேஷ் கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்களின் எதிர்பார்ப்புக்கும், உணர்வுகளுக்கும் எதிரான அளவில் இந்த தேர்தல் முடிவுகள் அமைந்துள்ளது என்று தெரிவித்தார்.

தேர்தலின்போது முறைகேடுகள் நடைபெற்றதாகக் கூறிய அவர், இது குறித்து தேர்தல் ஆணையத்தில் புகார் அளிக்கப்போவதாகவும் திரு ஜெய்ராம் ரமேஷ் குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

ஜம்மு-கஷ்மீரில் தேசிய மாநாட்டுக் கட்சிக்கு கிடைத்த வெற்றி மக்கள் நம்பிக்கைக்கும், முன்னேற்றத்திற்கும் கிடைத்துள்ள வெற்றி என அக்கட்சியின் துணைத்தலைவர் திரு ஓமர் அப்துல்லா கூறியுள்ளார்.

கந்தர்பால் தொகுதியில் தாம் வெற்றிபெற்றதற்கான சான்றிதழை பெற்ற பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிஜேபி மற்றும் அதன் கூட்டணி கட்சிகளின் பிரச்சாரத்தை மக்கள் நிராகரித்துள்ளதாக குறிப்பிட்டார்.

இதனிடையே ஸ்ரீநகரில் செய்தியாளர்களிடம் பேசிய தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவர் திரு ஃபரூக் அப்துல்லா, ஜம்மு-கஷ்மீரில் புதிதாக அமையவுள்ள கூட்டணி அரசின் முதலமைச்சராக திரு ஓமர் அப்துல்லா பதவியேற்பார் என்று தெரிவித்தார்.

இந்நிலையில் மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவர் திருமதி மெஹ்பூபா முப்தி, ஜம்மு-கஷ்மீரில் மக்கள் அளித்த தீர்ப்பை தலைவணங்கி ஏற்றுக் கொள்வதாகக் கூறியுள்ளார்.

ஜம்மு-கஷ்மீர் மக்கள் நிலையான அரசு அமைய வேண்டும் என்பதற்காக காங்கிரஸ் -தேசிய மாநாட்டுக் கட்சி கூட்டணிக்கு வாக்களித்திருப்பதாகத் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

70-வது தேசிய திரைப்பட விருதுகளை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று புதுதில்லியில் வழங்கினார்.

திரைப்படத் துறையின் உயரிய விருதான தாதா சாஹேப் பால்கே விருதை பிரபல நடிகர் மிதுன் சக்ரவர்திக்கு குடியரசுத் தலைவர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய திருமதி திரௌபதி முர்மு, உயரிய விருதுபெற்ற மிதுன் சக்ரவர்த்திக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தார்

திரைப்படத்துறையில் பல்வேறு பிரிவுகளிலும் வெற்றிபெற்றிருக்கும் அனைவருக்கும் தமது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சிறந்த தமிழ் திரைப்படத்திற்கான விருதை பொன்னியின் செல்வன் இயக்குநர் திரு மணிரத்னம் பெற்றுக் கொண்டார்.

இந்த படத்தில் இசையமைத்த ஏ ஆர் ரஹ்மானுக்கு சிறந்த பின்னயி இசையமைப்பாளருக்கான விருது வழங்கப்பட்டது.

இந்த படத்தில் ஒலி வடிவமைப்புக்கான விருது ஆனந்த் கிருஷ்ணமூர்த்திக்கும், ஒளிப்பதிவாளர் ரவி வர்மனுக்கு சிறந்த ஒளிப்பதிவாளருக்கான விருதும் வழங்கப்பட்டது.

திருச்சிற்றம்பலம் படத்தில் நடித்த நடிகை நித்யாமேனனுக்கு சிறந்த நடிகைக்கான தேசிய விருது அளிக்கப்பட்டது.

இப்படத்தின் நடன இயக்குநராக பணியாற்றிய சதிஷ்கிருஷ்ணாவுக்கு சிறந்த நடன இயக்குநருக்கான விருது வழங்கப்பட்டது.

காந்தாரா படத்தில் நடித்த ரிஷப் ஷெட்டிக்கு சிறந்த நடிகருக்கான தேசிய விருது வழங்கப்பட்டது.

இந்நிகழச்சியில் மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ், இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**[]<<<>>>[]**

இந்திய விமானப்படையின் 92-வது ஆண்டு நிறைவு விழா இன்று கொண்டாடப்பட்டது.

இதையொட்டி நாட்டின் பல்வேறு பகுதிகளில் விமாப்படையினரின் சிறப்பு சாகச நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

விமானப்படை தினத்தையொட்டி சென்னை தாம்பரத்தில் உள்ள விமானப்படை தளத்தில் நடைபெற்ற விழாவில், முப்படைகளின் தலைவர் ஜென்ரல் **Anil Chauhan** சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, தேசியக்கொடியை ஏற்றிவைத்தார்.

இவ்விழாவில் வீரர்களின் சிறப்பு அணிவகுப்பும், விமானங்களின் அணிவகுப்பும் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் விமானப்படை தளபதி ஏர்சீப் மார்ஷல் **A.P. Singh** அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

விழாவில் பேசிய அவர், உலகில் தற்போது நிலவும் நிச்சயமற்ற சூழல் காரணமாக, எழுந்துள்ள சவால்களை எதிர்கொள்ள விமானப்படை தயாராக உள்ளதாக கூறினார்.

தாய் நாட்டிற்காக உயிரிழந்த வீரர்களின் தியாகம் போற்றத்தக்கது என்றும், அவர்களது தியாகத்திற்கு ஈடு இணையில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

ஆற்றல்மிக்க வலிமையான தன்னிறைவு கொண்ட விமானப்படை என்ற கருப்பொருளின் அடிப்படையில் இந்த ஆண்டு சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

கடந்த ஆண்டு, விமானப்படையில் புதிய போர் விமானங்கள் இணைக்கப்பட்டு பல சாதனைகள் நிகழ்த்தப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

61 ஆண்டுகளுக்குப் பின்னர், 30க்கும் மேற்பட்ட நாடுகளுடன் இணைந்து தரங் சக்தி என்ற கூட்டுப் பயிற்சி நடத்தப்பட்டதாகவும் அவர் கூறினார்.

பாதுகாப்பு தளவாடங்களை உள்நாட்டிலேயே தயாரிக்கும் வகையில் சுயசார்பு இந்தியா திட்டத்தின் கீழ், பாதுகாப்பு சாதனங்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருவதாக ஏர்சீப் மார்ஷல் **A.P. Singh** கூறினார்.

இந்த விழாவில் சிறப்பு அம்சமாக சூரியகிரண் மற்றும் சாரங் குழுக்களின் விமான சாகசங்கள் நடைபெற்றன.

அதிநவீன போர் ஹெலிகாப்டர் பிரச்சந்த் மற்றும் தேஜஸ் போர் விமானத்தின் செயல் விளக்கங்களும் இடம்பெற்றன.

ஓய்வு பெற்ற ராணுவ தளபதிகள் மற்றும் விமானப்படையைச் சேர்ந்தவர்களும், அவர்களது குடும்பத்தினரும் இந்த விழாவில் பங்கேற்றனர்.

**[]<<<>>>[]**

அடல் பென்சன் திட்டத்தில் இதுவரை ஏழு கோடிக்கும் மேற்பட்டோர் இணைந்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

ஓய்வூதிய நிதியம் மற்றும் ஒழுங்குமுறை மேம்பாட்டு ஆணையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், நடப்பு ஆண்டில் மட்டும் 56 லட்சத்திற்கும் அதிகமானோர் அடல் பென்சன் திட்டத்தில் இணைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் சேருபவர்கள் செலுத்தும் பங்களிப்பின் அடிப்படையில் மாதத்திற்கு ஆயிரம் ரூபாய் முதல் ஐயாயிரம் ரூபாய் வரை ஓய்வூதியமாக பெற இயலும்.

**[]<<<>>>[]**

நாட்டின் மீன் உற்பத்தி திறன் விரைவாக அதிகரித்து வருவதாக மத்திய மீன்வளத்துறை இணை அமைச்சர் திரு ஜார்ஜ் குரியன் தெரிவித்துள்ளார்.

செங்கல்பட்டு மாவட்டம் முட்டுக்காட்டில் உள்ள மத்திய உவர் நீர் மீன் வளர்ப்பு ஆராய்ச்சி நிலையத்தில் இன்று ஆய்வு மேற்கொண்ட அமைச்சர், மீன் உற்பத்தித்துறையை மேம்படுத்துவதற்கு பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான அரசு பல திட்டங்களை செயல்படுத்தி வருவதாகக் கூறினார்.

மீன் வளத்தை அதிகரிப்பது மட்டுமன்றி மீன் தொழிலை சார்ந்துள்ள தொழில்களையும் ஊக்குவித்து மீனவர்களின் வருவாயை பெருக்குவதற்கான திட்டங்கள் அதிக அளவில் செயல்படுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் அடிப்படையில் இயந்திர வழி கற்றலுக்கு புதுமையான முறைகளை கண்டு பிடித்ததற்காக இயற்பியல் துறையைச் சேர்ந்த இருவருக்கு நோபல் பரிசு பகிர்ந்தளிக்கப்படுகிறது.

அமெரிக்காவைச் சேர்ந்த விஞ்ஞானி திரு John H. Hopfield மற்றும் கனடாவைச் சேர்ந்த கணினி நிபுணர் திரு Geoffrey E. Hinton -க்கும் இந்த நோபல் பரிசு பகிர்ந்தளிக்கப்படுகிறது.

**[]<<<>>>[]**

உலகக் கோப்பை மகளிர் டுவெண்டி –டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் நியுசிலாந்து – ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையேயான ஆட்டம் இன்னும் சற்று நேரத்தில் தொடங்குகிறது.

சார்ஜாவில் நடைபெறவுள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற ஆஸ்திரேலியா முதலில் பேட் செய்ய தீர்மானித்துள்ளது.

**[]<<<>>>[]**

ஆர்ட்டிக் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் மாள்விகா பன்சோத் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

பின்லாந்தில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-19, 24-22 என்ற செட் கணக்கில் தைவானின் **Yun sung** -யை வென்றார்.

**[]<<<>>>[]**